## நெல்லுக்கான பயிர்க் காப்பீடு: முழு பிரீமியம் வசூலிக்க அரசு ஏற்பாடு

First Published : 10 Dec 2010 11:17:05 PM IST

சென்னை, டிச. 10: நெல் பயிரிடும் விவசாயிகளிடம் பயிர்க் காப்பீட்டுக்கான முழு பிரீமியத்தை வசூலிக்க உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

பயிர்க் காப்பீடு செய்யும் நெல் விவசாயிகளிடம் முழு பிரீமியம் வாங்க மறுக்கும் கூட்டுறவு வங்கிகள் குறித்த செய்தி 10.12.2010 தேதியிட்ட தினமணி நாளிதழில் வெளியானது.

இந்நிலையில் பயிர்க் காப்பீடு குறித்து தமிழக அரசு வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்தி:

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள டெல்டா மாவட்ட விவசாயிகள் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் முழு பயனையும் அடைந்திடும் வகையில், கூட்டுறவு வங்கிகள் எவ்வித சுணக்கமுமின்றி செயல்பட வேண்டுமென முதல்வர் கருணாநிதி அறிவுறுத்தியுள்ளார்.

பயிர்க் காப்பீடு குறித்து விவசாயிகள் முழுமையாக அறிந்திடும் வகையில் மாவட்ட ஆட்சியர்கள், மத்திய கூட்டுறவு வங்கி அலுவலர்கள் விளம்பரம் செய்துள்ளார்கள்.

மேலும், கடன் பெறாத விவசாயிகள் பயிர்க் காப்பீடு செய்திட இம்மாதம் 15-ம் தேதி கடைசி நாள் என்று உள்ளதால், கடைசி நேரக் கூட்ட நெரிசலைத் தவிர்க்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து கூட்டுறவு சங்க தனி அலுவலர்கள், களப் பணியாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

தஞ்சாவூர் மற்றும் கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கிகளில் ஒரு லட்சத்து 28 ஆயிரத்து 509 விவசாயிகள், ரூ.415 கோடி அளவுக்கு காப்பீடு செய்துள்ளார்கள்.

மேலும், எந்த ஒரு விவசாயியும் கூடுதல் பிரீமியம் செலுத்த விரும்பினால், அனைத்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களிலும் பிரீமியத் தொகையை வசூலிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

## ஒரே இரவில் கொட்டித் தீர்த்தது கன மழை : ஆயிரக்கணக்கான ஏக்கர் பயிர்கள் சேதம்

பதிவு செய்த நாள் : டிசம்பர் 11,2010,00:28 IST

செஞ்சி : செஞ்சி பகுதியில் ஒரே இரவில் கொட்டித் தீர்த்த கன மழையால் ஒருவர் இறந்தார். ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவிலான நெல், கரும்பு பயிர் கள் தண்ணீரில் மூழ்கின. வீடுகளை வெள்ளம் சூழ்ந்ததால் மக்கள் பெரும் அவதிக்குள்ளாயினர். செஞ்சி - விழுப்புரம் உட்பட பல சாலைகளில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.
வடகிழக்கு பருவமழை துவங்கி, விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பகுதியில் நல்ல மழை பெய்து வந்தது. பெரும்பாலான ஏரிகள் நிரம்பின. இந்நிலையில், நேற்று முன்தினம் நள்ளிரவில் திடீரென இடியுடன் கூடிய கன மழை கொட்டித் தீர்த்தது. செஞ்சியில் 127.5 மி.மீ., மழை பதிவாகி இருந்தது.

இந்த மழையில் மாவட்டத்தின் பெரிய ஏரிகளில் ஒன்றான மேல்மலையனூர் ஏரி நிரம்பி வழிந்தது. ஏற்கனவே நிரம்பி இருந்த ஏரிகளில் இருந்தும் பெருமளவு வெள்ளம் வெளியேறியது. திருவண்ணாமலை மாவட்டத்தில் பெய்த கனமழையால், காரணாம்பூண்டி ஏரியில் உடைப்பு ஏற்பட்டது. வஸ்திரம் புரவடை, சோழந்தாங்கல் ஏரிகளில் இருந்தும் அதிகளவில் தண்ணீர் வெளியேறியது. இதனால் செம்மேடு, கலத்தம்பட்டு, சொக்கனந்தல், தென்பாலை உட்பட பல கிராமங்களை வெள்ள நீர் சூழ்ந்தது. சாலைகளில் தண்ணீர் வழிந்தோடி போக்குவரத்து பாதிக்கப்பட்டது. ஏராளமான நெல், கரும்பு பயிர்கள் தண்ணீரில் மூழ்கின. வீடுகளை வெள்ளம்சூழ்ந்தது.

சுவர் இடிந்து ஒருவர் பலி:  கிராமங்களில் நெல் வயல்களிலும், வீடுகளிலும் மழை வெள்ளம் புகுந்தது.  காமகரம் கிராமத்தில் வீட்டு சுவர் இடிந்து விழுந்ததில், வேடியப்பன் (75) என்பவர் இறந்தார். என்.ஆர். பேட்டை எட்டியாந்தாங்கல் ஏரி எதுவாயில் நரிக்குறவர் மற்றும் இருளர் குடியிருப்பில் தண்ணீர் புகுந்து 10க்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்தன. கல்லாலிப்பட்டு கிராமத்தில் முனுசாமி, விஸ்வநாதன் ஆகியோரின் தலா ஒரு பசுமாடு மின்னல் தாக்கி இறந்தன.

சங்கராபரணி ஆற்றில் வெள்ளம்: வராகநதியில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தினால் பாக்கம், புதுப்பாளையம், தென்பாலை, செவலபுரை தரைப்பாலத்தில் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. சங்கராபரணி ஆற்றில் வெள்ளம் ஏற்பட்டு கரையோரம் அறுவடைக்கு தயாராக இருந்த நெற்பயிர்களும், அறுவடை முடிந்து கட்டி வைத்திருந்த நெற்கதிர்களும் அடித்துச் செல்லப்பட்டன. ராஜாம்புலியூர் கிராமத்திற்கு செல்லும் இரண்டு வழிகளும் துண்டிக்கப்பட்டன.

செஞ்சி - விழுப்புரம் நெடுஞ்சாலையில் நரி ஓடையில் ஏற்பட்ட வெள்ளத்தால் கடந்த ஒரு மாதத்தில் மூன்றாவது முறையாக சாலை துண்டிக்கப்பட்டு போக்குவரத்து நின்றது.
ஆக்கிரமிப்பினால் சிக்கல்: செஞ்சி பீ. ஏரியில் இருந்து உபரி நீர் செல்லும் வாய்க்கால் மீது

ஆக்கிரமிப்புகள் இருந்ததால் மழை வெள்ளம் செல்வதற்கு வழி இல்லாமல் சாலையில் வழிந்தோடியது. இதனால், வாகனங்கள் செல்ல முடியாமல் செஞ்சி கூட்ரோட்டில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. பேரூராட்சி ஊழியர்கள் பொக்லைன் கொண்டு ஆக்கிரமிப்பை அகற்ற அவசரமாக எடுத்த முயற்சி பயனற்று போனது. தொடர்ந்து மழை வெள்ளம், சாலையில் வழிந்தோடியது.

அலட்சியமே அதிக சேதத்திற்கு காரணம்: ஏரிகளில் இருந்து உபரி நீர் செல்லும் வாய்க்கால்களை விவசாயிகளே ஆக்கிரமித்து அழித்தனர். ஆக்கிரமிப்பை அகற்றாமல் அலட்சியப்படுத்தியதால், மழை வெள்ளம் செல்ல வழி இல்லாமல் பயிர்களில் புகுந்து நாசமாக்கியது. நீர் பிடிப்பு பகுதியில் கட்டியிருந்த வீடுகள் வெள்ளம் சூழ்ந்து இடியும் நிலை ஏற்பட்டுள்ளது.

குடியிருப்புகளில் வெள்ளம்: விழுப்புரம் அடுத்த சாலை அகரம் ஏரி வாய்க்கால் அருகே இந்திரா நகர் குடியிருப்புகள் அமைந்துள்ளது. நேற்று முன்தினம் இரவு மழை பெய்ததால் அருகே உள்ள ஊரல்குட்டை திறந்து விடப்பட்டதால் வாய்க்கால் வழியாக வந்த வெள்ள நீர் இந்திரா நகர் குடியிருப்புகளில் புகுந்தது.

வெள்ளம் புகுந்ததால் சுந்தர்ராஜன், முத்து ஆகியோரது வீட்டுச் சுவர்கள் இடிந்து விழுந்தன. வெள்ள நீர் குளம் போல் தேங்கியதால் அப்பகுதி மக்கள் அவதியடைந்தனர்.

**வெள்ளத்தில் சிக்கிய நெல் பயிர்களுக்கு ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய் நிவாரணம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 11,2010,00:32 IST

செஞ்சி : செஞ்சி பகுதியில் ஏற்பட்ட மழை வெள்ளத்தில் சிக்கிய நெல் பயிர்களுக்கு ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய் நிவாரணம் வழங்க வேண்டும் என எம்.எல்.ஏ., செந்தமிழ்ச்செல்வன் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.செஞ்சி பகுதியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மேல்மலையனூர் தொகுதி பா.ம.க., எம்.எல்.ஏ., செந்தமிழ்ச்செல்வன் பார்வையிட்டார். பின்னர் நிருபர்களிடம் அவர் கூறியதாவது : செஞ்சி பகுதியில் பெய்துள்ள கனமழையினால் பல கிராமங்களில் வெள் ளம் சூழ்ந்துள்ளது. விளைந்த பயிர்கள் அழிந்து போய் விட்டன. எனது சொந்த கிராமமான கலத்தம்பட்டு உட்பட 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

வீடுகளில் இருந்த ஆடு, கோழியை வெள்ளம் இழுத்துச் சென்றுள்ளது. இதில் ஏராளமானவர்கள் சாகுபடி செய்திருந்த பொன்னி நெல் மழை வெள்ளத்தில் மூழ்கி விட்டது. இவர்களுக்கு ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய் நிரவாரணம் வழங்க வேண்டும். வருவாய்த்துறையினரும், வேளாண்மை துறையினரும் வீடுகள் இழந்தவர்களுக்கும், கால்நடைகள், பயிர்கள் சேதமானவர்களுக்கும் உரிய இழப்பீடு வழங்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.வீடு இடிந்து விழுந்து இறந்த காமகரம்

வேடியப்பனுக்கு முதல்வர் நிவாரண நிதியில் இருந்து 2 லட்சம் ரூபாய் வழங்க வேண்டும். மழை வெள்ளத்தால் நோய் பரவாமல் இருக்க சுகாதாரத்துறையினர் கிராமங்களில் முகாமிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களை வேளாண் அறிவியல் கழக அதிகாரிகள் ஆய்வு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 11,2010,23:05 IST

காட்டுமன்னார்கோவில் : மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்கள் குறித்து தமிழ்நாடு வேளாண் அறிவியல் கழக அதிகாரிகள் ஆய்வு செய்து வருகின்றனர். தொடர் மழையால் சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்து நெற்பயிர்கள் மூழ்கின. தற்போது பயிர் பாதிப்பு குறித்து அரசு கணக்கெடுக்கும் பணியை துவங்கியுள்ளது. விருத்தாசலம் தமிழ்நாடு வேளாண் அறிவியில் கழக அதிகாரிகள் ராஜி, ஹரிப்பிரியா காட்டுமன்னார்கோவில், குமராட்சி பகுதிகளில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். இதில் பாதிக்கப்பட்ட பயிர்கள் மீண்டும் விளைச்சல் வர வாய்ப்பு உள்ளதா? உரம் போட்டால் பயிரை பாதிப்பில் இருந்து மீட்க முடியுமா? எந்தெந்த பகுதியில் கடும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது  உள்ளிட்ட விவரங்களை சேகரித்தனர். ஆய்வறிக்கை நாளை (13ம் தேதி) அரசுக்கு அளிக்க உள்ளனர்.

**பயிர் பாதிப்பு கணக்கெடுப்பு: 13ம் தேதி துவங்குகிறது : வேளாண் துணை இயக்குனர் தகவல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 11,2010,00:54 IST

கடலூர்  : கடலூர் மாவட்டத்தில் வரும் 13ம் தேதி முதல் பயிர் பாதிப்புகள் குறித்த கணக்கெடுக்கும் பணி துவங்கும் என வேளாண் துணை இயக்குனர் தெரிவித்துள்ளார்.கடலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம் நடந்தது. துணை இயக்குனர் சந்திரமோகன் தலைமை தாங்கினார். வேளாண்மை அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர். கூட்டத்தில் விரைவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். துணை இயக்குனர் பே”கையில் "வரும் 13ம் தேதி முதல் வெள்ள சேதம் குறித்து விருத்தாசலம் கே.வி.கே., விஞ்ஞானிகள், மாவட்ட வேளாண் அதிகாரிகள், தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் வெள்ளச்சேதம் குறித்த கணக்கெடுக்கும் பணியில் ஈடுபட உள்ளனர்.

இதன் பிறகு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு விரைவில் நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்' என்றார். விவசாயி வேங்கடபதி பே"கையில், "நெற்பயிர்கள் போன்று வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட கரும்புகளுக்கு நிவாரணம் வழங்கவேண்டும்' என்றார். இதற்கு பதிலளித்த நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலை ஆதிகாரிகள், "கரும்புக்கு இன்சூரன்ஸ் உள்ளது. எனவே 50 சதவீதத்திற்கு மேல் பாதிக்கப்பட்ட கரும்புகளுக்கு உரிய நிவாரணம் வழங்கப்படும்' என தெரிவித்தார்.மேலும் நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலையில் கரும்பிற்கு இன்னும் விலை அறிவிக்கவில்லை என விவசாயிகளின் கேள்விக்கு, "இந்த மாத இறுதிக்குள் கரும்பிற்கான விலை அறிவிக்கப்படும்' என அதிகாரிகள் தெரிவித்தனர். எம்.ஆர்.கே., சர்க்கரை ஆலை அதிகாரி பேசும் போது, "கரும்பு வெட்ட கட்டிங் ஆர்டர் கொடுக்கப்பட்டது. ஆனால் மழையின் காரணமாக நிறுத்தப்பட்டுள்ளது. வயல்களில் தண்ணீர் நிற்பதால் வரும் 17ம் தேதி அல்லது 23ம் தேதி கட்டிங் ஆர்டர் வழங்கப்படுவது துவங்கும்' என தெரிவித்தார்.

**சூரியகாந்தி சிறு தழை வழங்கல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 11,2010,01:53 IST

நாமக்கல்: "வேளாண் விரிவாக்க மையத்தில் இரண்டு கிலோ சூரியகாந்தி சிறுதழை வினியோகம்' என, வேளாண் உதவி இயக்குனர் தங்கராசு தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: எருமப்பட்டி வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில் சூரியகாந்தி சிறுதழை, ஒவ்வொரு விவசாயிக்கும் தலா இரண்டு கிலோ என்ற அளவில் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. சிறுதழை தேவைப்படும் விவசாயிகள் வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில் உள்ள உதவி வேளாண் அலுவலரை தொடர்பு கொண்டு பயன்பெறலாம், என்றார்.

**இட்லி அரிசி மட்டும் ரூ. 100 விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 11,2010,02:29 IST

ஈரோடு: இட்லி அரிசி வரத்து குறைவால், ஈரோடு அரிசி மார்க்கெட்டில் இட்லி அரிசி மட்டும் மூட்டைக்கு 100 ரூபாய் வரை விலை உயர்ந்துள்ளது. ஈரோடு மாவட்டத்தில் 40 நாட்களுக்கு மேலாக பெய்த பலத்த மழையால் அரிசி வரத்து வெகுவாக குறைந்தது. இந்த வாரம் மழை பொழிவு குறைந்துள்ளது. அரிசி மார்க்கெட் இயல்பு நிலைக்கு திரும்பியது. இட்லி அரிசி வரத்து முற்றிலுமாக இல்லை. இதனால் இட்லி அரிசி மட்டும் மூட்டைக்கு 50 முதல் 100 ரூபாய் வரை விலை உயர்ந்துள்ளது. வாரந்தோறும் மார்க்கெட்டுக்கு 3,000 அரிசி மூட்டைகளுக்கு குறைவில்லாமல் விற்பனைக்காக வரும். நேற்று முன்தினம் 2,500 மூட்டைகள் வரத்தானதில் 1,500 மூட்டைகள் விற்றுள்ளன. அரிசி விற்பனை ஓரளவுக்கு இருந்தது. அரிசியின் விலை

நிலவரம் (75 கிலோ): அதிசயப் பொன்னி (புதியது) 1,550 முதல் 1,600 ரூபாய், கர்நாடகா டீலக்ஸ் 2,250 முதல் 2,350 ரூபாய், தமிழ்நாடு பி.பி.டி., பொன்னி(பழையது) 1,900 முதல் 2,000 ரூபாய், இட்லி அரிசி 1,550 முதல் 1,650 ரூபாய், ஏ.டி.டி.36 (புதியது) 1,450 முதல் 1,550 ரூபாய், கோ-43 ரகம் 1,300 முதல் 1,400 ரூபாய் வரை விலைபோனது.

**தோட்டக்கலைத்துறை சீரமைக்க ரூ.5,000 கோடி! இந்திய வேளாண் இயக்குனர் கருத்து**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 11,2010,01:08 IST

திருச்சி: ""12வது ஐந்தாண்டு திட்டத்தில் 5,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தால் தோட்டக்கலைத்துறையை சிறப்பாக சீரமைக்க முடியும் என்பது எனது கருத்து,'' என இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமத்தின் இணை இயக்குனர் ஜெனரல் ஹெச்.பி.,சிங் நேற்று நிருபர்களிடம் கூறினார்.

உலக வாழை மாநாடு துவக்க விழா, திருச்சியில் நேற்று நடந்தது. இதில், பங்கேற்ற இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமத்தின் இணை இயக்குனர் ஜெனரல் ஹெச்.பி.,சிங் நிருபர்களிடம் கூறியதாவது: திருச்சி, போதாவூரில் உள்ள தேசிய வாழை ஆராய்ச்சி கழகத்தில் திசு வளர்ப்பு மைய ஆய்வகம் துவங்கப்பட்டுள்ளது. 69 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திசு வளர்ப்பு மையம், 5 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உயிரி தொழில்நுட்ப ஆய்வகம் அமைந்துள்ளது. தவிர, வாழை பதப்படுத்தும் மையம் அமைக்க 45 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. வளர்ப்பகம் மையம் இன்னும் ஆறு மாதத்தில் அமைய உள்ளது. இந்திய வேளாண் ஆராய்ச்சி மையத்துக்கு ஐந்து ஆண்டில் 18 முதல் 19 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

இந்திய வேளாண் ஆராய்ச்சி மையத்துக்கு 11வது ஐந்தாண்டு திட்டத்தில் மத்திய அரசு 761 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. இதில், 121 கோடி ரூபாய் பெறப்பட்டுள்ளது. நடப்பாண்டுக்குள் ஐந்து கோடி ரூபாய் வழங்கப்பட உள்ளது. அடுத்தாண்டு 200 கோடி ரூபாய் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தோட்டக்கலைத்துறைக்கு 12வது ஐந்தாண்டு திட்டத்தில், 5,000 கோடி ரூபாய் ஒதுக்கினால், அதிலிருக்கும் பிரச்னைகளை சரிசெய்யவும், துறையை சீரமைக்க முடியும் என்பது எனது கருத்து. தோட்டக்கலைத்துறைக்கு 10 நிறுவனங்கள், 7 இயக்குனரகங்கள், 6 ஆராய்ச்சி மையங்கள் உள்பட நாடு முழுவதும் 23 நிறுவனங்கள் உள்ளன. நாட்டில் மொத்த உற்பத்தியில் ஆண்டுக்கு 3,500 கோடி ரூபாய்க்கு நறுமணப் பொருட்களும், 2,900 கோடி ரூபாய்க்கு முந்திரியும், 1,500 கோடி ரூபாய்க்கு வெங்காயமும், 520 கோடி ரூபாய்க்கு பூக்களும், 400 கோடி ரூபாய்க்கு பழங்களும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

நம்மிடம் மிகச்சிறந்த தொழில்நுட்பங்கள் உள்ளன. ஆனால், அதற்கு தேவையான நிறுவனங்கள்

தான் மிகக்குறைவாக உள்ளது. கடந்தாண்டு மாங்கூழ் தேவை அதிகளவு இருந்தது. ஆனால், பற்றாக்குறை ஏற்பட்டது. நம்மிடம் உள்ள தொழில்நுட்பத்தை நாம் சரியாக பயன்படுத்தினால் தோட்டக்கலைத்துறையில் நாம் சிறந்து விளங்க முடியும். இவ்வாறு அவர் கூறினார்.

**கத்தரிக்காய் விலை "ஷாக்': ஒரு சிப்பம் 1,500 ரூபாய்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 11,2010,00:47 IST

திருப்பூர்: கனமழை காரணமாக கத்தரிக்காய் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது; திருப்பூர் மார்க்கெட்டில் நேற்று 20 கிலோ கொண்ட ஒரு சிப்பம் கத்தரிக்காய் 1,500 ரூபாய்க்கு விற்றது. திருப்பூர், தென்னம்பாளையம் மார்க்கெட்டுக்கு, சீசன் தருணத்தில் 1,000 சிப்பம் கத்தரிக்காய் விற்பனைக்கு வரும். கடந்த மாதம் முதல் பெய்து வரும் வட கிழக்கு பருவமழையால், கத்தரி விளைச்சல் பாதித்துள்ளது. செடிகளில் பூ உதிர்தல், காய்களில் தண்ணீர் கோர்த்து வீணாதல் என 90 சதவீத விளைச்சல் குறைந்துள்ளது. லோக்கல் மற்றும் பெருந்துறை பகுதிகளில் இருந்து, தினமும் மார்க்கெட்டிற்கு 80 சிப்பம் கத்தரி வருவதே அதிசயமாகி விட்டது. குறைவான வரத்தால், வியாபாரிகள் இடையே கடும் போட்டி நிலவுகிறது. கடந்த வாரத்தில் ஒரு சிப்பம் 600 ரூபாய் முதல் 800 ரூபாய் வரை விற்றது. நேற்று, ஒரு சிப்பம் 1,500 ரூபாய்க்கு விற்பனையானது. சின்ன வெங்காயம் பழையது சிப்பம் 700 ரூபாய் வரை; புடலை 12 கிலோ சிப்பம் 50 ரூபாய்க்கு விற்கும்; இது, 300 ரூபாயை தொட்டுள்ளது. பீட்ரூட், முருங்கை, அவரை, பீர்க்கன் என, அனைத்து காய்கறிகளின் விலையும் உச்சத்தில் இருப்பது, பொதுமக்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. வியாபாரிகள் கூறுகையில், "கனமழை காரணமாகவே, விலை உயர்வு தொடர்கிறது. 150 சிப்பம் வரும் இடத்தில், 10 சிப்பம் வருகிறது. சில்லரை விற்பனையில் கிலோ 70 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இதற்கு மேல் விலை நிர்ணயம் செய்தால், விற்பனையாகாது. நஷ்டத்திற்கே விற்க வேண்டியுள்ளது. மழை குறைந்துள்ளதால், வரும் நாட்களில் செடிகளின் வளர்ச்சி நன்றாக இருக்கும். அடுத்த ஒரு மாதத்தில், காய்களின் விலை வீழ்ச்சி அடையும். இன்று, தங்கம் விலைக்கு இணையாக கத்தரி இருக்கிறது; அதிக விளைச்சலால், தேங்கும் நிலை விரைவில் ஏற்படும்,' என்றனர்.

**விவசாய விரிவாக்க மையங்களில் உரங்கள் இருப்பு வைக்க உத்தரவு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 11,2010,21:54 IST

தேனி : மாவட்டம் முழுவதும் மழை நல்ல முறையில் பெய்துள்ளதால் விவசாயிகளுக்கு தேவையான விதைகள், உரங்கள், மருந்துகளை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்க

உத்தரவிடப்பட்டுள்ளது. தேனி மாவட்டத்தில் வழக்கத்தை விட நடப்பு ஆண்டு பலத்த மழை பெய்துள்ளது. இதனால் நேரடி, மறைமுக பாசன நிலங்களிலும், மானாவாரி நிலங்களிலும் விவசாய பணிகள் தொடங்கி உள்ளன. இந்த நிலையில் விவசாயிகளுக்கு அதிகளவு விதைகள், உரங்கள், மருந்துகள் தேவைப்படும். எனவே விவசாயிகளுக்கு எதுவும் தட்டுப்பாடு இன்றி கிடைக்கும் வகையில் தேவையான உரங்கள், விதைகள், மருந்துகளை விவசாய விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்க வேண்டும். கேட்டு வரும் விவசாயிகளுக்கு அரசு நடைமுறைகளை காரணம் காட்டி தாமதம் ஏற்படுத்தக்கூடாது. தடையின்றி உடனடியாக வழங்க வேண்டும் என கலெக்டர் முத்துவீரன் உத்தரவிட்டுள்ளார்.

பறக்குது பாமாயில் விலை: சர்க்கரை விலை உயர்வு

பதிவு செய்த நாள் : டிசம்பர் 11,2010,21:50 IST

விருதுநகர் : விருதுநகர் மார்க்கெட்டில், பாமாயில் விலை டின்னுக்கு 60 ரூபாயும், சர்க்கரை விலை மூடைக்கு 25 ரூபாய் உயர்ந்துள்ளது. மழையால்ச மார்க்கெட் மந்த நிலையில் உள்ளது. கர்நாடகா, மகாராஷ்டிராவிலிருந்து துவரை வரத்து இருப்பதால், மூடைக்கு 300 ரூபாய் குறைந்துள்ளது. விருதுநகரில் கடந்த வாரம் 3,030 ஆக இருந்த சர்க்கரை விலை, இந்த வாரம் மூடைக்கு 3,055 ரூபாயாக உயர்ந்துள்ளது. கடலெண்ணெய் டின்னுக்கு 1,200 ஆகவும், சூரிய காந்தி எண்ணெய் 730 ஆகவும், பாமாயில் 860 ரூபாயிலிருந்து 930 ஆக உயர்ந்துள்ளது. நிலக்கடலைப் பருப்பு 3,600 ஆகவும், 2,900 ஆக இருந்த கடலைப் புண்ணாக்கு 2,800 ரூபாயாக குறைந்துள்ளது. பருப்பு: விருதுநகரில் உளுந்து விலை மூடைக்கு 4,600 ரூபாயிலிருந்து 4,700 வரையும், சுமார் ரகம் 4,200 லிருந்து 4,300 வரையும், பர்மா பருவட்டு 5,200 லிருந்து 5,300 ரூபாயாகவும் உள்ளது. நயம் உளுந்தம் பருப்பு 6,200லிருந்து 6,300 ஆகவும், பொடி உளுந்தம் பருப்பு 5,500 ஆகவும், பர்மா பருவட்டு உளுந்தம் பருப்பு 5,600 ரூபாயாகவும் உள்ளது. 3,700 ஆக இருந்த துவரை 3,400 ஆகவும், 3,500 ஆக இருந்த பொடி துவரை 3,200 ரூபாயாக உள்ளது. மகாராஷ்டிரா, கர்நாடகாவிலிருந்து புது துவரை வரத்து உள்ளதால் இதன் விலை மேலும் குறைய வாய்ப்புள்ளது. துவரம் பருப்பு 6,000 ஆகவும், பொடி துவரம் பருப்பு 5,000 ரூபாயாகவும் உள்ளது. பாசிப்பயறு 4,600 ரூபாயிலிருந்து 4,700 வரையும், சுமார் ரகம் 4,100 ஆகவும், பாசிப்பருப்பு 6,000 லிருந்து 6,100 வரையும், சுமார் ரகம் 5,600 ரூபாயாகவும் உள்ளது. கொண்டைக்கடலை 2,600 லிருந்து 2,800 ஆகவும், பொரிகடலை 2080 லிருந்து 2,180 ரூபாயாக உள்ளது. மிளகாய் வத்தல்: விருதுநகரில் சம்பா மிளகாய் வத்தல் விலை குவிண்டாலுக்கு 3,000 ரூபாயிலிருந்து 3,500 வரையும், சங்கரன்கோவில் வத்தல் 4,750 லிருந்து 5,500 வரையும், முண்டு வத்தல் 3,500 லிருந்து 3,750 ரூபாய் வரை உள்ளது. புது சோடை வத்தல் 2,500 ரூபாயாகவும், பழைய சோடை வத்தல் 2,000 ரூபாயாக உள்ளது.

**வெள்ளத்தில் மூழ்கிய நெல் பயிர்கள் விவசாய அதிகாரிகள் ஆலோசனை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 11,2010,21:45 IST

விருதுநகர் : விருதுநகர் மாவட்டத்தில் வெள்ளத்தில் மூழ்கிய நெற்பயிர்களை பாதுகாக்க விவசாயிகளுக்கு அதிகாரிகள் ஆலோசனை தெரிவித்து உள்ளனர். தொடர் மழை காரணமாக பேராலி பகுதியில் நெற்பயிர்கள் மழை நீரில் மூழ்கி உள்ளன. பயிர்களை பாதுகாக்க விவசாயத்துறையினரின் ஆலோசனைகள்: முதலில் வயலில் உள்ள தண்ணீரை வடிக்க வேண்டும். வடிய வழியில்லாத நிலங்களில் பயிர் மஞ்சள், பழுப்பு நிறமாக மாற வாய்ப்புள்ளது. துத்தநாகம், தழைச்சத்து பற்றாக்குறையால் நிற மாற்றம் ஏற்படுகிறது. ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீரில், இரண்டு கிலோ யூரியா, ஒரு கிலோ துத்தநாக சல்பேட் கலந்து கைத்தெளிப்பான் கொண்டு பயிர் இலைகளின் மீது தெளிக்க வேண்டும். தண்ணீர் வடிந்த பின்னர் ஊட்டச்சத்து பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளது. மேலுரமாக ஏக்கருக்கு 42 கிலோ அமோனியம் குளோரைடு அல்லது 50 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 22 கிலோ யூரியாவுடன் 15 கிலோ ஜிப்சம், 4 கிலோ வேப்பம் புண்ணாக்கு கலந்து, இரவு முழுவதும் வைத்திருந்து, மறுநாள் 17 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் உரத்தையும் சேர்த்து இடுதல் வேண்டும். இலை சுருட்டுப்புழு நோய்: இதை கட்டுப்படுத்த 10 சத பயிர்கள் பாதிப்படைந்த நிலையில், ஒரு ஏக்கருக்கு பாசலோன் 600 மில்லி அல்லது குளோரி பைரிபாஸ் 500 மில்லி பூச்சிக்கொல்லி மருந்தை, 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். குலை நோய்: இலையில் சிறு கண்வடிவ புள்ளி தென்பட்டால் குலை நோய் தாக்குதலாகும். ஒரு ஏக்கருக்கு கார்பண்டசிம் 100 கிராம் அல்லது எடிபன்பாஸ் 200 கிராம் பூஞ்சானக்கொல்லி மருந்தை, 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்கலாம். அல்லது குடோமோனஸ் ஒரு லிட்டருக்கு 2 கிராம், நீரில் கலந்து தெளிப்பதன் மூலம் நோயை கட்டுப்படுத்தலாம்.

**தொடர்மழையால் வரத்து குறைந்ததுநெல்லையில் காய்கறி விலை "கிடுகிடு'**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 11,2010,02:08 IST

திருநெல்வேலி:நெல்லை மார்க்கெட்களுக்கு வெளிமாவட்டங்களில் இருந்து வரத்து குறைந்ததால் கத்தரிக்காய், வெங்காயம் போன்ற காய்கறிகளின் விலை கடுமையாக உயர்ந்துள்ளன. இதனால் மக்கள் கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.நெல்லை டவுன், தச்சநல்லூர் மற்றும் பாளை., மார்க்கெட்களுக்கு ஒட்டன்சத்திரம், திண்டுக்கல், மேட்டுப்பாளையம், ஓசூர் போன்ற இடங்களில் இருந்து பீன்ஸ், உருளைக்கிழங்கு, கேரட், பீட்ருட், தக்காளி, வெண்டைக்காய் போன்ற பல்வேறு காய்கறிகள் விற்பனைக்கு வருகின்றன. நெல்லை மாவட்டத்தில் பாவூர்சத்திரம், ஆலங்குளம்,

சுரண்டை போன்ற இடங்களில் இருந்தும் கத்தரிக்காய், தக்காளி போன்ற காய்கறிகளும் மார்க்கெட்களுக்கு விற்பனைக்கு வருவது வழக்கம்.கடந்த 2 வாரங்களுக்கும் மேலாக நெல்லை மாவட்டத்தில் பெய்த கனமழை பெய்தது. இதனால் விவசாய பணிகள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளன. மழையால் காய்கறி தோட்டங்களில் தண்ணீர் தேங்கியுள்ளதால் காய்கறிகளை பறிக்க முடியாமலும், பறித்த காய்கறிகளை விற்பனைக்கு கொண்டு வரமுடியாமலும் விவசாயிகள் கஷ்டப்பட்டனர்.

இதன்காரணமாக நெல்லை மார்க்கெட்களுக்கு வர வேண்டிய காய்கறி லோடுகள் பெருமளவு குறைந்தது. இதனால் கத்தரிக்காய், முருங்கைக்காய் உட்பட பல்வேறு காய்கறிகளின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.நேற்றைய மார்க்கெட் நிலவரப்படி கத்தரிக்காய் ஒரு கிலோ 45 ரூபாயக்கு விற்பனையானது. இதேபோல் தக்காளி 30, வெண்டைக்காய் 18, உருளைக்கிழங்கு 24, கேரட் 38, மிளகாய் 20, மாங்காய் 20, கருனைக்கிழங்கு 22, சிறுகிழங்கு 20, பீன்ஸ் 32, இஞ்சி 26, பல்லாரி வெங்காயம் 35, வெங்காயம் 35, சேனகிழங்கு 22, முட்டைகோஸ் 15, முருங்கைக்காய் 40, கொத்தமல்லி இலை 40, நெல்லிக்காய் 40 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது.இதுகுறித்து நெல்லை டவுன் மார்க்கெட் வியாபாரி ஒருவர் கூறுகையில்,""வழக்கமாக முகூர்த்த நாட்களில் காய்கறிகளின் விலை அதிகமாக இருக்கும். மழை காரணமாக எங்களுக்கு வரவேண்டிய காய்கறி லோடு குறித்த நேரத்திற்கு வரவில்லை. இதனால் காய்கறிகளை அதிக விலைக்கு விற்பனை செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். வெளிமாவட்டங்களில் இருந்து காய்கறி வரத்து அதிகரித்ததும், காய்கறிகள் விலை குறையும்'' என்றார்.நெல்லை பகுதியில் காய்கறிகள் விலை எதிர்பாக்காத அளவில் உயர்ந்ததால் பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

**நெல்பயிரில் கூண்டுப்புழு தாக்குதலை கட்டுப்படுத்த யோசனை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 11,2010,01:46 IST

செய்துங்கநல்லூர் ; நெல்பயிரில் கூண்டுப்புழு தாக்குதலை கட்டுப்படுத்த வேளாண் அதிகாரி யோசனை கூறியுள்ளார்.

நெல்பயிரில் ஆங்காங்கே பயிரில் இலை நுனிகள் வெட்டப்பட்டு திட்டு திட்டாக வளர்ச்சி குன்றியுள்ளதாக காணப்படும், இலைத்துண்டுகள் மற்றும் வெண்ணிற இறக்கைகள் நீரில் மிதக்கும் இலைத்துண்டுகளை பிரித்து பார்த்தால் உள்ளே புழு இருக்கும், இலைகளில் வெண்மை நிறப்பகுதிகள் காணப்படும், நிலத்தில் தேங்கியுள்ள தண்ணீரில் வெண்ணிற இறக்கைகள் கொண்ட சிறிய மென்மையான பூச்சிகள் பறக்கும். இத்தகைய அறிகுறிகள் நெல் பயிரில் காணப்பட்டால் கூண்டுப்புழு தாக்குதல் ஏற்பட்டுள்ளது என்று தெரிந்து கொள்ளலாம்.

வடிகால் வசதியின்றி தண்ணீர் அதிகம் தேங்கும் வயல்களில் கூண்டுப்புழு சேதம் ஏற்படும். இத்

தாக்குதலைக் கட்டுப்படுத்த, வயலின் குறுக்கே கயிற்றை இழுத்து கூண்டுப் புழுக்களை நீரில் விழச் செய்ய வேண்டும். பின்னர் தண்ணீரை வடிக்க வேண்டும். வயிலினுள் வரும் கூண்டுப் புழுக்களை அழிக்க வடிகாலில் வைக்கோல்பிரி அல்லது சாக்கு வைத்து மிதக்கும் கூண்டுப் புழுக்களை சேகரித்து அழிக்க வேண்டும். வயலில் இருந்து தண்ணீரை முழுவதும் வடித்த பின்னர்தான் மருந்து தெளிக்க வேண்டும். ஏக்கருக்கு 400 மில்லி மானோகுரோட்டாபாஸ் அல்லது 300 மில்லி எண்டோசல்பான் தெளித்து கூண்டுப்புழுவினை கட்டுப்படுத்த வேண்டும். மருந்துக் கரைசல் இலைகளில் நன்கு படிய சாண்டோவிட், இன்ட்ரான், ஸ்டிக்கால் போன்ற திரவ சோப்புகளில் ஒன்றினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு கால் மில்லி வீதம் சேர்த்து கலக்கிக் கொள்ள வேண்டும். இவ்வாறு ஸ்ரீவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் முருகேசன் தெரிவித்துள்ளார்.

**தென்காசியில் தோட்டக்கலை துறைதிட்டங்கள் பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 11,2010,01:41 IST

தென்காசி:தென்காசியில் தோட்டக்கலை துறை திட்டங்கள் குறித்த பயிற்சி முகாம் நடந்தது.தென்காசி வட்டாரத்தில் தோட்டக்கலை துறை மூலம் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம், தேசிய தோட்டக்கலை இயக்க திட்டம், தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டம் மூலம் துல்லிய பண்ணை திட்டம், சொட்டுநீர் பாசன திட்டம், தேசிய மூங்கில் திட்டம் உள்ளிட்டவைகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டங்கள் மற்றும் தொழில் நுட்ப பயிற்சி குறித்த முகாம் தென்காசி யூனியன் அலுவலக கூட்ட அரங்கில் நடந்தது.பஞ்.,தலைவர்கள், விவசாயிகளுக்காக நடந்த இப்பயிற்சி முகாமிற்கு யூனியன் சேர்மன் தமிழ்செல்வி தலைமை வகித்தார்.

தோட்டக்கலை துணை இயக்குநர் ராகன் ரவிச்சந்திரன் முன்னிலை வகித்தார். தென்காசி வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் கிருபாகரன் வரவேற்று திட்டங்கள் செயல்படுத்தும் விதம் குறித்த பயிற்சியும், கிள்ளிகுளம் வேளாண்மை கல்லூரி பேராசிரியர் நயினார் தோட்டக்கலை பயிர்கள் பற்றிய தொழில் நுட்ப பயிற்சியும் அளித்தனர். மணிகண்டன் சொட்டுநீர் பாசன திட்டம் பற்றி விளக்கம் அளித்தார்.தோட்டக்கலை அலுவலர் ஜெயபாரதி மாலதி நன்றி கூறினார். ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் இசக்கிமுத்து, முத்துகிருஷ்ணன், புணமாலை செய்திருந்தனர்.

**தென்காசியில் தோட்டக்கலை துறைதிட்டங்கள் பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 11,2010,01:41 IST

தென்காசி:தென்காசியில் தோட்டக்கலை துறை திட்டங்கள் குறித்த பயிற்சி முகாம் நடந்தது.தென்காசி வட்டாரத்தில் தோட்டக்கலை துறை மூலம் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம், தேசிய தோட்டக்கலை இயக்க திட்டம், தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டம் மூலம் துல்லிய பண்ணை திட்டம், சொட்டுநீர் பாசன திட்டம், தேசிய மூங்கில் திட்டம் உள்ளிட்டவைகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டங்கள் மற்றும் தொழில் நுட்ப பயிற்சி குறித்த முகாம் தென்காசி யூனியன் அலுவலக கூட்ட அரங்கில் நடந்தது.பஞ்.,தலைவர்கள், விவசாயிகளுக்காக நடந்த இப்பயிற்சி முகாமிற்கு யூனியன் சேர்மன் தமிழ்செல்வி தலைமை வகித்தார்.

தோட்டக்கலை துணை இயக்குநர் ராகன் ரவிச்சந்திரன் முன்னிலை வகித்தார். தென்காசி வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் கிருபாகரன் வரவேற்று திட்டங்கள் செயல்படுத்தும் விதம் குறித்த பயிற்சியும், கிள்ளிகுளம் வேளாண்மை கல்லூரி பேராசிரியர் நயினார் தோட்டக்கலை பயிர்கள் பற்றிய தொழில் நுட்ப பயிற்சியும் அளித்தனர். மணிகண்டன் சொட்டுநீர் பாசன திட்டம் பற்றி விளக்கம் அளித்தார்.தோட்டக்கலை அலுவலர் ஜெயபாரதி மாலதி நன்றி கூறினார். ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் இசக்கிமுத்து, முத்துகிருஷ்ணன், புணமாலை செய்திருந்தனர்.

**கடல் வண்ண மீன்கள் வளர்ப்பு பயிற்சி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 10,2010,22:32 IST

மண்டபம் : மண்டபம் மத்திய கடல்மீன் ஆராய்ச்சி நிலையத்தில், தமிழகத்திலே முதலாவதாக கடல் வண்ண மீன்கள் வளர்ப்பு பயற்சி தொடங்கப்பட்டது.உலக அளவில் கடல்வண்ண மீன்கள் வளர்ப்பு பெருகி வருகிறது.இதன் மூலம் 200-300 மில்லியன் டாலர் வருவாய் கிடைக்கிறது.கடலில் 400 க்கும் அதிகமான கடல்வண்ண மீன்கள் உள்ளன. இந்த மீன்கள் பவளப்பாறைகளுக்குள் வளரும் தன்மை கொண்டது. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தொழிலில் ஈடுபடுபவர்கள், பவளப்பாறைகளில் வாழும் மீன்களை பிடிக்கும்போது, பவளப்பாறைகள் அழிகின்றன.

பவளப்பாறைகள் பாதுகாக்கும் நோக்கில், மத்திய கடல்மீன் ஆராய்ச்சி நிலையத்தினருக்கு,ஹைதராபாத்தில் இயங்கும் நேஷனல் பிஷரிஸ் டெவலப்மென்ட் போர்டு

சார்பில், கடல்வண்ண மீன்கள் வளர்ப்பு குறித்த பயிற்சி வழங்கப்பட்டது. தமிழகத்திலே முதலாவதாக மண்டபம் மத்திய கடல்மீன் ஆராய்ச்சி நிலையத்தில், கடல் வண்ண மீன்கள் வளர்ப்பு பயிற்சி நிலைய பொறுப்பாளர் விஞ்ஞானி கோபக்குமார் தலைமையில் தொடங்கியது.டாக்டர் ககாடி வழவேற்றார். லட்சத்தீவு உட்பட இந்தியாவில் பல மாநிலங்களை சேர்ந்த மீன்துறை அதிகாரிகள்,நிர்வாகிகள்,பொது நல அமைப்பை சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர்.

விஞ்ஞானி கோபக்குமார் கூறியதாவது: கடல் வண்ண மீன்களை ,வியாபார நோக்கில் பிடிப்பவர்கள் பவளப்பாறைகளையும் அழிக்கின்றனர். மன்னார் வளைகுடாவில் ஏராளமான மீன்கள் உள்ளன.இதன் குஞ்சுகளை பிடித்து தொட்டி கடல்நீரில் வளர்க்கிறோம்,என்றார். கடல்வண்ண மீன்கள் வளர்ப்பு குறித்த பயிற்சி கையேட்டை நபார்டின் துணை பொது மேலாளர் கண்ணபிரான் வழங்க,மண்டபம் கடல்பாசி வளர்ப்பு நிலையத்தின் விஞ்ஞானி ஈஸ்வரன் பெற்றுக்கொண்டார். தங்கச்சி மடம் சுவாமிநாதன் பவுன்டேசனை சேர்ந்த ஸ்ரீ கிருபா கலந்து கொண்டார்.டாக்டர் அப்துல்நாசர் நன்றி கூறினார்.

**கால்நடை பாதுகாப்பு முகாம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 10,2010,22:33 IST

முதுகுளத்தூர் : முதுகுளத்தூர் அருகே விளங்குளத்தூரில் கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம், ஊராட்சி தலைவர் கணேசன் தலைமையிலும், வட்டார கால்நடை மருத்துவர் சுந்தரமூர்த்தி முன்னிலையிலும் நடந்தது. ஆடு, மாடு, கோழிகளுக்கு இலவசமாக தடுப்பூசிகள் போடப்பட்டு, மருந்துகளும் வழங்கப்பட்டன. நாய்களுக்கு வெறிநாய்கடி தடுப்பூசிகளும் போடப்பட்டன. சிறந்த கலப்பின கிடேரி கன்றுகளை பராமரித்த விவசாயிக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன. மருத்துவர் வெள்ளைச்சாமி, ஆய்வாளர் முத்துச்சாமி, உதவியாளர்கள் மலைச்சாமி, செல்தில்வேல், கிராம கருவூட்டல் பணியாளர் பாலசுப்பிரமணியன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**பசுந்தேயிலைக்கு போதிய விலை பொரங்காடு சீமெ வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 10,2010,22:41 IST

கோத்தகிரி: "பசுந்தேயிலைக்கு கட்டுப்படியான விலை கிடைக்க, மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என வலியுறுத்தப்பட்டுள்ளது. பொரங்காடு சீமெ நலச்சங்க பொதுச் செயலாளர் காரிகவுடர், மாவட்ட கலெக்டருக்கு அனுப்பியுள்ள மனு: நீலகிரி மாவட்டத்தில் 65

ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறு தேயிலை விவசாயிகள் மற்றும் 3 லட்சத்துக்கும் மேற்பட்ட விவசாயத் தொழிலாளர்கள் உள்ளனர். தற்போது, தேயிலை மகசூல் குறைந்துள்ள நிலையிலும், ஒரு கிலோ பசுந்தேயிலைக்கு குறைந்த விலையே வழங்கப்படுகிறது. தொழிலாளர்களுக்கு கூலி வழங்க முடியாமலும், தோட்டங்களை பராமரிக்க முடியாமலும், தோட்டம் வைத்துள்ளவர்கள் திணறுகின்றனர். பல தொழிற்சாலை உரிமையாளர்கள், விவசாயிகளுக்கு சீரான விலை வழங்குவதில்லை. எனவே, பசுந்தேயிலைக்கு விலை நிர்ணயித்து, விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு, காரி கவுடர் கூறியுள்ளார்.

**விவசாயிகள் மனுக்களுக்கு தனிப்பதிவேடு:கலெக்டர் உத்தரவு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 10,2010,23:15 IST

திருப்பூர்: ""விவசாயிகள் குறைகேட்பு கூட்டத்தில் பெறப்படும் மனுக்கள் மீதான நடவடிக்கைகளை, தனிப்பதிவேடுகளில் பராமரிக்க வேண்டும்'' என, கலெக்டர் சமயமூர்த்தி உத்தரவிட்டுள்ளார். குறைகேட்பு கூட்டத்தில், விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு கலெக்டர் சமயமூர்த்தி பதிலளித்து பேசியதாவது: விவசாயிகள் குறைகேட்பு கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள் மீதான நடவடிக்கை சற்று மந்தமாக உள்ளது; விரைவுபடுத்த வேண்டும். மின்துறையிடம் மட்டும் 13 மனுக்கள் பாக்கியுள்ளன. பல்லடம் மின்வாரியத்தில் நான்கு மனுக்கள் நடவடிக்கையின்றி உள்ளன. அதேபோல், உடுமலை, காங்கயம் தாலுகாக்களில், தலா ஐந்து; பல்லடம் தாலுகாவில் ஏழு; அவிநாசி தாலுகாவில் ஆறு என 40 மனுக்கள் மீதான நடவடிக்கைகள் பூர்த்தியாகவில்லை. விவசாயிகள் குறைகேட்பு கூட்டங்களில் பெறப்படும் மனுக்கள், அவற்றின் மீதான நடவடிக்கைகள், அரசுக்கு விடுக்கப்படும் கோரிக்கை குறித்து தனிப்பதிவேடு தயாரிக்க வேண்டும். ஒவ்வொரு கூட்டத்தின் போதும் அதிகாரிகள் அதை எடுத்து வர வேண்டும். விவசாயிகள் குறைகேட்பின்போது, சம்பந்தப்பட்ட துறை வாரியான அதிகாரிகள் மட்டுமே வருவர். இதனால், மற்ற பிரச்னைகளை, மக்கள் குறைகேட்பு கூட்டங்களில் தெரிவித்து தீர்வு காண வேண்டும். அதேபோல், ஒவ்வொரு கூட்டங்களுக்கும், துறை வாரியான அதிகாரிகள் தவறாமல் பங்கேற்க வேண்டும். இல்லாதபட்சத்தில், விளக்க கடிதம் அளிக்க வேண்டும், என்றார்.

**சூடுபிடிக்கிறது, இளநீர் விற்பனை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 10,2010,23:12 IST

வெள்ளகோவில்: தொடர் மழை ஓய்ந்து, சூரியன் சுட்டெரிக்கத் துவங்கியுள்ளதால், வெள்ளகோவில் பகுதியில் இளநீர் விற்பனை சூடுபிடிக்கத் துவங்கியுள்ளது. வட கிழக்கு பருவமழையால், குறைந்த காற்றழுத்த தாழ்வு மையம் உருவாகி, மாநிலம் முழுவதும் தொடர் மழை பெய்து வந்தது. காலையில் மழை, இரவில் பனி என, வெயில் என்பதே இல்லாமல் இருந்தது. வெள்ளகோவில், மூலனூர், முத்தூர் பகுதிகளில் இளநீர் விற்பனையில் ஈடுபடுவோர் மிகவும் பாதிக்கப்பட்டனர். கடந்த இரண்டு நாட்களாக மழை முற்றிலும் குறைந்து, வெள்ளகோவில் சுற்றுப்பகுதிகளில் வெயிலின் உக்கிரம் அதிகரித்து வருகிறது. வெயில் தாக்கத்தை தணித்துக் கொள்ள பலரும் இயற்கை பானமான இளநீரையே நாடுகின்றனர். வெள்ளகோவில், முத்தூர், மூலனூர் மட்டுமின்றி கரூர், காங்கயம் பகுதிகளில் இருந்தும் வெள்ளகோவிலுக்கு இளநீர் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. இளநீர் வியாபாரி ஒருவர் கூறியதாவது: சில இடங்களில் தற்போதும் மழை பெய்து வருவதால், குறைந்தளவு இளநீரே விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. மழை ஈரம் காரணமாக, மரம் ஏறி இளநீர் பறிப்பது என்பது முடியாத காரியமாக உள்ளது. வழக்கமாக ஆறு ரூபாய், எட்டு ரூபாய் என்றிருந்த கொள்முதல் விலை, தற்போது 10 ரூபாயாக உள்ளது. தோப்புகளில் இருந்து இளநீரை வாங்கி, வாகனங்களில் கொண்டு வரும் செலவு அதிகமாகிறது. சில்லரையில் 14 முதல் 15 ரூபாய் வரை விற்கப்படுகிறது. மழை குறைந்து வெயில் தாக்கம் அதிகரித்து வருவதால், பலரும் இளநீரை நாடி வருகின்றனர்; விற்பனை சூடுபிடிக்கத் துவங்கியுள்ளது, என்றார்.